DJRD-5-TA

# இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? 5

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு உலக பிரசித்திபெற்ற முன்னணி சித்தாந்த நாத்திகரான Dr. ஆண்டனி ப்ளூ மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியரும் கிறிஸ்தவ சிந்தாந்தமேதையும் வரலாற்றாலருமான Dr. கேரி ஹேபர்மசுக்கும் இடையிலான விவாதத்தை பார்க்கும்படி உங்களை வரவேற்கிறோம், இவர் தற்போது லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தின் பிரிவினுடைய தலைவராக இருக்கிறார், இன்றைய தலைப்பு, "இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா?"

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் பார்த்ததாக நினைத்தார்கள் என்றால், இங்க மனபிரமைக்கு இடமில்லை, நமக்கு தெரிந்தவரை வேற எதுவும் பொருந்தாது. நம்மை பொறுத்தவரை இது அபூர்வமான ஒரு காரியம். ஒரு கட்டத்தில் நாமளே கேட்போம் இதுதான் அன்டந்து என்பதற்கு என்ன ஆதராம், குறிப்பாக இந்த உலகத்துல என்னால தேவனை பார்க்க முடிந்தா, ஜெபித்தா, சுகம்பெற்றால், மரணத்திற்கு பின்பு வாழ்க்கை இருந்தா என்னால சொல்ல முடியும், "இதையெல்லாம் பார்த்தா தேவ குமாரன் மாதிரிதான் தெரியுது." இயேசு தம்மை பற்றி சொன்னவைகளை உயிர்த்தெழுதலுக்கான ஆதாரம் என்று நான் நினைக்கிறேன்.

**Dr. ஆண்டனி பிழூ** அது சரியாக இருந்தால், ஏன் இதை நிறைய ஜனங்கள் விசுவாசிக்காம இருக்காங்க?

**அறிவிப்பாளர்:** கிறிஸ்துவம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தான் நிலை நிற்கிறது. கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்திருந்தால், கிறிஸ்தவம் உண்மையானதாக இருக்கும். அப்படி இல்லாவிட்டார், கிறிஸ்தவம் பொய்யாக இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்கும், உங்கள் பிரசங்கமும் வீணாயிருக்கும், நீங்க உங்கள் பாவங்களிலேயே தரித்திருப்பீர்கள்.

***

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** வணக்கம்! நாம் பார்த்துகொண்டிருக்கும் கேள்வி என்னவென்றால், இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? மிக கடினமான கேள்வி. நம்மோடு இரண்டு உலக பிரசித்திபெற்ற சித்தாந்த மேதைகள் இருக்கிறார்கள். அவர்கள் Dr. ஆண்டனி ப்ளூ, உலகின் சிறந்த முன்னணி சித்தாந்த நாத்திகராக கருதபப்ட்டு வருகிறார். இவர் 23 புத்தகங்களை எழுதியிருக்கிறார், ஹூமிஸ் பிலாசபி ஆப் பிலிப், தேவன் மற்றும் சித்தாந்தம், காட் அண்ட் பிலாசபி, மேற்கத்திய சித்தாந்தம் மாற்றிய ஊர் அறிமுகம், நாத்திகத்தை குறித்த கருத்துக்களும் தேவனை குறித்த சித்தாந்த கட்டுரைகளும், சுதந்திரம், அழிவில்லாமை.

என்னுடைய இரண்டாவது விருந்தினர் Dr. ஹேபர்மஸ், இவர் கிறிஸ்தவ சித்தாந்த மேதையாகவும் வரலாற்றாலராகவும் இருக்கிறார், இவர் இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்த ஆதாரங்களை எடுத்து கூறுவதில் திறம்பெற்றவராக கருதபப்டுகிறார். கேரியும் 21 புத்தகங்களை எழுதியிருக்கிறார், அதில் சரித்திர நாயகர் இயேசு: இயேசு கிறிஸ்துவின் வாழ்கையை குறித்த பண்டைய கால ஆவணங்கள், அற்புதங்களை தற்காத்தல், தேவன் இருக்கிறார் என்று ஏன் நம்பவேண்டும்? நண்பர்களே, நீங்க எங்களோட இருப்பதில் ரொம்ப சந்தோஷம்

இந்த பகுதியில் திரும்ப திரும்ப எல்லாருகுள்ளும் எழுகின்ற முக்கியமான கேள்வியை பார்க்க விருக்கிறோம் அந்த கேள்வியை பற்றி பேசிலாம், “அதாவது, எங்க அம்மா, என்னோட சகோதரிகள், எனோட குடும்ப நபர்கள், என்னோட நண்பர்கள், அது யாராக இருந்தாலும் சரி, டோனி, அவங்க உயிர்த்தெழுதலை நம்பனும், ஆனா அப்படியில்லையே, இன்றைக்கு உயிர்த்தெழுதல் சம்பவிப்பதை நாம் பார்ப்பதில்லை. சரியா? நா இதுவரைக்கும் கலந்துகிட்ட எல்லா அடக்க ஆராதனையிலும், Dr. ஹேபர்மஸ், இதுவரைக்கும் ஒருத்தர் கூட கல்லறையில் இருந்து வெளிய வந்ததை பார்க்கவில்லை. என்னுடைய அனுபவத்தில், என்னோட அனுபவத்தை பொறுத்தவரை “செத்தவன் செய்த்தவனாகவே இருக்கிறான்” எந்த நீங்க என்னை துவக்கத்தில் இருந்து நடத்தி செல்ல விரும்புகிறீர்களா, அதாவது, மரித்தவன் மரித்தவனாகவே இருக்கிறான், அது ஒரு அற்புதத்தை எதிர்பாத்து இருக்கிறது – ஏதோ சாதாரண அற்புதமல்ல இயேசுவை மரணத்தில் இருந்து உயிரோடு எழும்பிவர செய்த அற்புதம், அந்த மாதிரி அனுபவங்கள் இதுவரைக்கும் இல்லை, அதை குறித்த  யோசனையும் இல்லை. எனக்கு, நீங்க உதவ முடியுமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, அது நல்லதுதான். அதாவது, நீங்க சித்தாந்தவாதிகள் சொல்லும் முன்னாட்களின் சாத்தியகூறுகள் என்ற காரியத்தை சொல்லுகிறீர்கள். அற்புதங்களில் இது மிகப்பெரிய பிரத்காஹ்னையாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன் – உயிர்த்தெழுதல் இல்லை அற்புதங்கள்தான் பிரச்சனை. ஒரு இறையியலாளர் இரண்டு விதங்களில் இதை சொல்ல முடியுமென நினைக்கிறேன். அதில் ஒன்று உலகத்தை குறித்த உங்கள் கண்ணோட்டம் தவறு என்று கூறிடுவார். நாம இங்கயும் உயிர்த்தெழுதல் எவரஸ்ட் சிகரத்திலும் நடக்கவில்லை. இந்த உலகம் எல்லாவற்றிற்கும் ஒத்துழைப்பு கொடுக்கணும். இப்ப, நாம ஏதோவொரு விஷயத்தை குறித்து இங்க விவாதிக்கவில்லை ஆனா இந்த விவாதம் நீண்டு கொண்டே போகும், ஒரு கேள்வி கேட்கிறேன், “நம்ம, உலகம் எப்படிபட்டதாக இருக்கிறது? தேவன் இருக்கிறார் என்பதை எடுத்துகொள்ளும் பதிவுகளை முன்வைக்க விரும்புகிறேன். மரண தருவாய்க்கு இணையான அனுபவங்களை சொல்ல விரும்புகிறேன். ஏன்னென்றால், தேவன், இருக்கிறார் என்று சொன்னால், பூமியே எழும்பி நிற்பது போல இருக்கும் இல்லாவிட்டால் யாராவது எழுந்து நின்னு கேள்வி கேட்ப்பாங்க, அதாவது, இங்கிருக்கிற என்னோட நண்பர், Dr. பிளூ, 1985 விவாதத்தில் பேசும்போது, சொன்னார், “தேவன் இருக்கிறார் என்று நாம சொல்வதற்கு ஏதாவது காரணங்களிருந்தால், உயிர்த்தெழுதல் நிகழ்ந்தது பெரிய விஷயமாக இருக்கும்.” இந்த வார்த்தைகள் தான் அவர் சொன்ன

வார்த்தைகளாக இருந்தது என்று நினைக்கிறேன். தேவன் அந்த கோணத்தை மாற்றிவிட்டார்.

தற்போதும் அற்புதங்கள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது, சில வருடங்களுக்கு முன்பாக டபிள் பிளைன்ட் ஆய்வில் சான் பிரான்சிஸ்கோ மருத்துவமனையில் நானூறு இருதய நோயுள்ள வியாதியஸ்தர்களை ஆய்வு செய்தது நினைவிருக்கு வருகிறது. அவர்களில் பாதி பேருக்கு ஜெபித்தார்கள், பாதி பேருக்கு ஜெபிக்கவில்லை. 26 விதங்களின் கீழ் இந்த நபர்களை மேற்பார்வையிட்டனர் ஜெபிக்கப்பட்ட ஒவ்வொருவரும் சில முன்னேற்றத்தை அடைந்தார்கள் – அது வெளிப்படையாக தெரிந்தது. ஏதோ சுமாராக இல்லை படிப்படியாக முன்னேற்றம் இருந்தது – 26 பிரிவுகளில் 21 நிலைகளில் சுகம் உண்டானது. இதை மூடி மந்த்லி வெளியிட்டதென்று நினைக்கிறேன் இல்ல. அதை சத்தர்ன் ஜர்னல் ஆப் மெடிசின் வெளியிட்டது. மூடிக்கு எதிராக ஒன்றுமில்லை என்ன சொல்றன்னா, சத்தர்ன் ஜர்னல் ஆப் மெடிசின் குழுவினர் ஜெபிக்கப்பட்ட நபர்கள் எல்லாரும் 26 நிலைகளில் 21  நிலைகளில் சுகமும் முன்னேற்றமும் அடைந்திருந்தார்கள் என்று மருத்துவ ரீதியாக நிருபித்தனர்.

நா சொன்னமாதிரி , மரண தருவாயின் அனுபவங்கள். மரணத்திற்கு பிறகு வாழ்க்கை இருந்தா, இந்த மரண தருவாயின் அனுபவங்கள் விவாதத்திற்கு உரியதாக இருக்கும், அப்பதா களத்தில் இறங்க வேண்டிவரும். அதனால இந்த மாதிரியான காரியங்கள் மேலோங்கி நிற்கும்போது இதனோடு தொடர்புடைய மற்ற காரியங்களை முன்வைத்திடுங்கள், சரியா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதற்கு டோனியின் சார்பில் என்ன சொல்கிறார் என்று கேட்போம், உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன், டோனி. ஒரு விவசாயி இருந்தார் தன வாழ்நாள் முழுதும் வயலில் வாழ்ந்துகொண்டு இருந்தார். சரியா? தன்னுடைய வாழ்நாளில் அவர் பார்த்த மிருகங்கள் என்றால், அது கோழி, மாடுகள் மற்றும் குதிரைகள் தான். ஒருமுறை அவர் வனவிலங்கு சரணாலயத்திற்கு சென்றார், அங்க சுத்தி சுத்தி பார்த்தார், அவர் ஓரிடத்திற்கு நடந்து சென்றபோது, அங்கு ஒரு ஒட்டகச்சிவிங்கியை பார்த்தார், விரைத்து பார்த்துகொண்டிருந்தார், மறுபடியும் அதையே பார்த்துட்டு இருந்தார், அவர் தனது மனைவியிடம் சொன்னார், இந்த மாதிரி ஒரு மிருகமே இல்லை! அவருடைய அனுபவத்திற்கு மாறுபட்ட ஒன்றாக இருந்தது. சரி, நீங்களும் இந்த மாதிரி சொன்ன விவசாயிக்கு ஒப்பாக தான் இருகிறீர்கள். அதாவது, என்னுடைய அனுபவத்தில் உயிர்த்தெழுதலை பார்த்தது கிடையாது," ஆனா உங்களுக்கு கண்ணுக்கு முன்னால இருக்கிற ஆதாரங்களை ஏன் நிராகரிக்கிறீங்க?

**Dr. ஆண்டனி பிழூ** இது போதுன்னு எனக்கு தோனல, ஏன்னா அற்புதங்கள் என்று சொல்லுவது இயற்கையின் விதிப்படி இன்னொன்றை சார்ந்திருப்பதாக கருதபட்டுகிறது. ஏதோவொன்று நடந்துகொண்டே இருக்கிறது எனபது போல இருக்கும் மேலும் அது சாத்தியமில்லை என்று சொல்வதினால் ஜனங்களுடைய மார்கங்களிலோ மற்ற நம்பிக்கைகளிலோ எந்தவித மாற்றத்தை உண்டாக்கும் என்றுசொல்வதற்கு எந்த காரணங்களும் கிடையாது, புரியுதா. இந்த உயிர்த்தெழுதல் உண்டானது என்று விவாதிப்பதற்கு முக்கிய நோக்கம் என்னவென்றால்இது சாத்தியமானதல்ல நிச்சயம்

இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நடந்திருக்க கூடும் என்பதை புரிய வைப்பது தான்.புரியுதா, அதாவது, உதாரணமாக, ஒட்டக சிவிங்கிகள் இருக்க வாய்ப்பிருக்குன்னு எல்லாருக்கும் தெரியும். அது ஒரு சிருஷ்டிப்பு. இதை நமக்கு தெரியும்.. அதனால இது சாத்தியமல்ல என்று சொல்ல எந்த காரணத்தையும் தேட அவசியமில்லை. அதனால, சுவாரஸ்யமான எந்த காரியத்தையும் இது நிரூபிக்க போவது கிடையாது. இது ரொம்ப கடினமான ஒரு கட்டம் என்று நினைக்கிறேன். அற்புதங்கள் என்ற விஷயம் நிச்சயம் இயற்கையின் விதி மற்றும் இயல்பான அப்பாற்பட்ட ஒன்றாகத்தான் இருக்கிறது. இதற்கு காரணம் இயற்கையின் விதிகள் இருபதினால்தான், சில காரியங்கள் மனிதனுக்கு சாத்தியமாக இல்லாதபோது சுவாரஸ்யங்கள் உண்டாகிறது, "ஏதாவது, அசாத்தியமான காரியங்கள் நடக்குமா? அது மனிதர்களுக்கு சாத்தியமான விஷயம் அல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் மட்டுமே சாத்தியமாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நீங்க சொன்னது சரிதானா, எனக்கு ஒரு சிலாக்கியம் கிடைக்குதுன்னு சொல்ல முடியும், இது வருத்தமான ஸ்லாக்கியம், நா ஒரு அடக்க ஆராதனை நடத்தனும். இந்த பெண்ணை எனக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்புதான் தெரியும், நா பிலாரிடாவிற்கு போய் அடக்க ஆராதனையை நடத்தினேன். மூன்று வாரங்களுக்கு பிறகு மறுபடியும் அங்க போயிருந்தேன் அங்க பேசீட்டு இருந்தப்ப அந்த குடும்பமும் அங்க இருந்தாங்க. நா ஒரு உதாரணத்தை பயன்படுத்தினேன், "ஒரு மகள் என்னிடம் வந்து பேசுகிறாள், அவ ஒரு வழக்கறிஞர், அவள் என்னிடம் வந்து பேசும்போது, ' அதாவது, "இப்ப, அவங்க அம்மா மரித்து அவங்க அடக்கம்பண்ணி நான்கு வாரங்கள் ஆயிடுச்சு, அவ எங்கிட்ட வந்து,உங்களுக்கு தெரியுமா, நேற்று அம்மாவ பார்த்தேன் அவங்களோட மத்திய உணவு சாப்பிட்டதா சொல்றா."

இப்ப, நீங்க என்ன நினைப்பீங்க, உடனே எல்லாருக்குமே அதிர்சியாயிருக்கும், அவ ஒரு லாயராகவே இருந்தாலும் நல்ல பொன்னாக இருந்தாலும், நமக்கு என்ன தோணும், "இப்ப நீ என்ன சொன்ன, அதாவது நா மறுபடியும் உன்னோட, அம்மாவோட போன் நம்பரை என்னோட பதிவேட்டில் எழுதிவைக்கனுமோ."மரித்தவர்கள் திரும்ப வருவார்கள் என்ற எண்ணம் நமக்கு கிடையாது. சரி இப்போது கேரி சொல்வதை கவனிப்போம். கடந்த கால சரித்திரத்தில் ஒரு உயிர்த்தெழுதல் உண்டாயிருந்தது என்ற விஷயத்தை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வருவது எப்படி, இயேசு கிறிஸ்து உயிர்த்தாரா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, நா சொன்னமாதிரி, குறைந்தது இரண்டு வழிகள் இருக்கிறது. ஒன்று பிரமிப்பான காரியங்கள் இயற்கையாக நடக்கும்விதமான அனுபவங்களை பெறுதல்: ஜெபங்களுக்கு பதில் பெறுதல், சுகம், அல்லது மரண தருவாயின் அனுபவங்கள்; இந்த மரணத்திர்கேதுவான அனுபவம் என்பதில் மரணத்திற்கு பிறகான வாழ்கை உண்மை என்ற விவாதம் வருகிறது. வேறொரு விதமாக பார்த்தால், அவங்க அப்படி சொல்லியிருந்தாங்கன்னா, அந்த லாயர் அப்படி சொல்லியிருந்தா, நீங்க என்ன சொல்வீங்க, "இல்ல, இந்த ஆதாரம் போதாது." ஒருவேளை அவங்க தொடர்ந்து சில ஆதார பதிவுகளை கொடுத்தா என்னவாகும். சரி, இங்கதான் என்னோட வால் மார்ட் உதாரணத்தை நான் பயன்படுத்துகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை பற்றி சொல்லுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** என்னோட வால்மார்ட் உதாரணத்தில், இங்க ஒருத்தரை கூட்டீட்டு வந்திருக்கேன்னு வச்சுக்குவோம். இப்ப, நமக்கு கடைக்கு போறதுன்னா பிடிக்கும், ஒரு வண்டிய தள்ளீட்டு கடையையே சுத்தி வருவோம், அப்ப இந்த நண்பருக்கு ஹாய் சொல்லீட்டு போகும்போது இரண்டு லைன் தள்ளி இன்னொரு நண்பர் இன்னு இரண்டு லைன் தள்ளி இன்னொரு நண்பர் இப்ப இந்த மூன்று நண்பர்களுக்கு ஒரு குழுவாக இணைந்து பேசீட்டு இருப்பாங்க. கொஞ்சம் கற்பனை செய்து பார்க்கலாம் ஒரு வால்மார்ட் கடையில ஒருத்தர பார்த்து கைகுலுக்கி பேசறேன். கொஞ்சம் ஹ்டூரம் தள்ளி போனதுக்கு பிறகு இன்னொருத்தரை பார்த்து அவங்ககிட்டயும் பேசறேன் அப்பறம் கொஞ்ச தூரம் போனதும் இன்னொருத்தர்ந்னு இப்படி ஐந்து பேர்களை சந்திக்கிறேன் அவங்களோட பேச ஆரம்பிக்கிறேன், ஆனா இதுல இன்னும் சில காரியங்களையும் கவனிக்க வேண்டியிருக்கு. அந்த நபருடைய ஷூல சேறு ஒட்டீட்டு இருக்குதுன்னு வைத்துகொள்வோம். நா அவர் பக்கத்துல போய் அவரை தொட்டு கைகுலுக்கி பேசீட்டே, அவருடைய தொலை தட்டி கொடுக்கிறேன். இப்ப ஒரு போட்டோவும் எடுத்துக்க விரும்புறோம். இப்ப, ஒருவேளை – இதை நல்லா கவனிக்கணும் – ஒருவேளை அந்த நபர் மூன்று நாள் அல்லது ஒருவாரத்திற்கு முன்பு மரித்து அடக்கப்பண்ணப்பட்டவராக இருந்தா எப்படி இருக்கும்? எனக்குள்ள சொல்லிக்குவேன், "நாம அடக்கம் பண்ணினவர் இவர் கிடையாது. அதாவது, நா அவரோட மெடிகல் ரிபோர்ட்ட பார்த்திருக்கேன். அந்த நபர் செத்துபோயிட்டாருன்னு தெரியும்." அப்ப, எனக்கு இருக்கிற ஆப்ஷன் என்ன?

இவங்க இரட்டை சகோதரர்கள்; இல்ல... வேருயாராவதா இருக்கலாம். இதைதான் இயற்கையான நியதிகள் என்று சொல்கிறோம். ஆனா ஒருவேளை அந்த நபர் உங்ககிட்ட பேசும்போது, "இல்ல. எனக்கு கார் விபத்து நடந்ததுதான் உங்களுக்கு தெரியுமே. இங்க, காயத்தை பாருங்க. நா இரட்டை சகோதரன் இல்ல. நான்தான் என்கிறார்." அப்ப, பிரம்மை பிடித்தவர் போல இருப்பீங்கல்ல. இல்ல, என்னை கிள்ளு, என்னை குத்து"

எனக்கு தெரியும், கொஞ்சம் நேரத்திற்கு பிறகு, அந்த கால்ல இருந்த சேறு, தொழில் தட்டிய உணர்வு... இதெல்லாம் இறுதியா உங்களை ஒரு முடிவிற்கு கொண்டு வந்து நிறுத்தும், "இல்ல! எனக்கு என்ன செய்றதுன்னு தெரியல ஆனா எங்கிட்ட இவர் செத்ததற்கான மருத்துவ சான்று இருக்குது, நா அடக்க ஆராதனையில் இருந்தேன், கார் விபத்தை நானே பார்த்தேன், உன்னோட தலையில காயம் இருந்தது. நீ எனக்கு மூன்று வருடமா நெருங்கிய நண்பரா இருந்திருக்கிற."

சரி இப்ப, நீங்க மற்றவர்களிடமும் கேட்க்கிறீங்க, "அவன நீங்களும் இங்க பார்த்தீங்களா? நீங்க எல்லாரும் பார்த்தீங்களா? சரி, ஒருவிழி அது பிரம்மையாக இருந்திருக்கலாம். "சுத்தி இருந்த கூட்டத்தார் அவனை பார்த்தார்களா? சரி, இப்ப, "வேற யாராவது அவனை தொட்டாங்களா? என்ன சொல்றேன்னா, இதை கண்டறிவதற்கு இரண்டாவது வழி இதுதான், இதிலிருந்து நாம இன்னொரு முடிவை எடுக்க முடியும், "இது என்னோட அனுபவத்திற்கு ஏற்றதாக இல்லை ஆனா இவர் அவரை மாதிரியே இருக்காரு."

என்னை பொறுத்தவரை இதே மாதிரிதான் அந்தகையும் இருந்தது, இதுதான் தோமாவின் விஷயத்தில் நடந்தது. இது தோமாவின் தீர்வாக இருந்திருக்கும். இந்த நபர்

வால்மார்ட்டில் நடக்க எந்தவித சாத்தியமும் இல்லை. அதனாலதான் சொல்றாரு, “நீயே தொட்டு பார்.” பவுல் கூறுகிறார், “நா அவங்க எல்லாரையும் கொல்லப்போகிறேன்.” அவன், இயேசுவை பார்த்தான். யாக்கோபு சொன்னார், வாய்ப்பே இல்லை.” அதாவது இதை எடுத்துகொள்ள இரண்டாவது வழி என்னவென்றால் இயற்கையான நியமங்கள் என்று நாம் நினைக்கும் காரியங்களுக்கு அப்பாற்பட்ட பலவிதமான பதிவுகள் நம்மிடம் இருக்கிறது.

இயற்கையின் விதியோடு இன்னொன்றையும் சேர்க்க விரும்புகிறேன். இயற்கையின் நியதிகள் என்பது மனித கருத்து அல்ல, அதாவது, நியூட்டனின் கொள்கைகள் அல்ல. ஹூமி நியூட்டனி விட சிறந்தது, ஆனால் இது நடக்காது என்று ஒதுக்கி வைக்க கூடிய காரியங்கள் அதில் இல்லை. இயற்கையின் நியதிகள் என்பது இயற்கையாக நடக்கும் விஷயங்களை இயற்கையின் கரங்களில் விட்டு கொடுத்தால் அதினால் உண்டாகும் காரியங்கள் என்று லூவிஸ் கூருகிறார். இதெல்லாம் புள்ளி விபரங்களின் விளக்கங்கள் பாறையினாலான சுவர்கள் அல்ல, சிமன்ட் சுவர்கள் அல்ல, இந்த புள்ளி விபரங்கள் மாற்றமடைய வாய்ப்புண்டு அதனால கல்லறையில் அடக்கத்தில் பார்த்த அந்த நபரை நான் வால்மார்ட்ல பார்க்க முடியும் என்பதை நா ஏற்றுகொள்ள தயாரா இருக்கணும். அப்படி நடக்கலாம் என்பதை ஏற்றுகொள்ள விருப்பதோட இருக்கலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நீங்க என்ன நினைக்கிறீங்க டோனி?

**Dr. ஆண்டனி பிழு** இல்ல, இப்படி எடுத்துக்க முடியாதுன்னு தா எனக்கு தோணுது, ஆனா இயற்கையின் விதிகள் எல்லாம் புள்ளிவிபரங்களை போன்றது என்ற கருத்தை ஏற்றுகொள்ள மாட்டேன்.

அற்புதங்கள் இயற்கையின் விதிகளை மேற்கொள்ளுகிறது என்ற காரியத்தை பார்க்கும்போது, உண்மையாகவே, நீங்க மனிஷனால முடியாத ஏதாவது ஒரு விஷயத்தை நடைமுறையில் செய்ய நினைப்பீங்களா. இதை ஒரு ஆதாரமும் இருக்குன்னு நினைக்கிறேன், ஆனா இதெல்லாம் நம்முடைய முற்காலத்தை பற்றிய நம்பிக்கையில் அடங்கியிருக்கிறது, இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை இருக்கிறது என்பதினால் அல்ல, ஆனா இந்த இயற்கையை பற்றிய நம்பிக்கைகளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை இருக்குது என்று முற்காலத்தில் சொல்லப்பட்டதை கேட்டதினால் உண்டாகிறது. உதாரணமாக, “ஆரம்பத்திலேயே இந்த மாதிரி நடக்கும்விதமான சில வல்லமைகள் இருந்திருக்கலாம்...” தேவையான காரியம் ஒன்றுதான் அதுவும் குறிப்பாக நாம விவாதிப்பதை குறித்ததும் இருக்கு அதுதான் மோசேயின் கொள்கைகளை கொண்ட முழு பாரம்பரியம். அதாவது தேவன் தான் வல்லமை கொண்டவர், சர்வ வல்லமை கொண்டவர் என்று சொல்வதோடு. மோசேயின் கொள்கைகள் கொண்ட முழு பாரம்பரியத்தின் தேவன் என்று சொல்லப்படுகிறது, பழைய ஏற்பாட்டின் தேவன். இந்த காரியத்தில் இருக்கிற நம்பிக்கைதான் மற்ற அற்புதங்களை குறித்து நம்பத்தக்க நம்பிக்கையை கொடுக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

**Dr. ஆண்டனி பிழு** ஆமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவர் உயிரோடு எழுப்பி இருந்தால், தேவனுடைய குமாரன் என்று சொல்லப்படுகிற ஒருவர் இருக்கனுமே தேவன் ஏதோவொரு மனிதனை மரணத்தில் இருந்து எழுப்பவில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நாம் விவாதித்து கொண்டிருக்கும் தலைப்பு, இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தாரா? நாம் திரும்ப வந்ததும், இதை குறித்து மேலும் சில விஷயங்களை பார்க்க இருக்கிறோம் இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்ற விஷயத்தை நீங்கள் நம்பும்படி செய்திடும் சில ஆதாரங்களையும் பார்க்கலாம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நாம் Dr. ஹேபர்மஸ் மற்றும் Dr. ஆண்டனி பளுவுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம். சரி கேரி, இயற்கையான ரீதியில் சில காரியங்கள் இருக்கும் என்று சொல்லுகிற இயற்கைவாதிகளின் கூற்றிற்கு முன்பாக நீங்கள் சொல்ல விரும்புகிற ஆதாரங்கள் என்ன? டோனியால இதை விளக்கமாக சொல்ல முடியல, இந்த ஆதாரங்கள், இதுவரைக்கு இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்து சொல்லப்பட்ட வரலாற்று ஆதாரங்கள். ஆனால் அவரை பொறுத்தவரை, "ஒரு சாதாரணமான அனுபவங்கள் மாதிரி, இது நடந்திருக்க முடியாது." சரி, நீங்க அதை பற்றி என்ன சொல்றீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆமா, இன்னொரு விதத்தையும் சொல்ல முடியும், உயிர்த்தெழுதலுக்கான ஆதாரத்தை மேற்கொள்ளும் வலிமை கொண்டிருக்கு, ஆனா இதை வேறுவிதமாகவும் சொல்ல முடியும், மற்றவைகளையும் இந்த உலகம் ஏற்றுகொள்ளுகிறது. இப்ப, மரணத்திற்கு இணையான அனுபவங்கள், உதாரணமாக பார்க்கும்போது, அது அற்புதமாக இருக்காது. இருட்ன்ஹாலும், மரண தருவாயின் அனுபவங்கள் மரணத்திற்கு பின் ஜீவன் இருபதற்கு ஆதாரம் என்றால், இயேசுவின் உயிர்த்தெழுதல் தனித்துவமுடையதாக இருந்திருக்கணும். ஆனா மரணத்திற்கு பிறகும் மனிதர்கள் வாழ்கிறார்கள், இது உயிர்த்தெழுதலை குறித்த புதிய கண்ணோட்டத்தை உங்களுக்கு கொடுத்திடும்.அப்ப, என்னை பொருத்தவரைக்கும் மரண அனுபவங்கள் என்பது வெறும் பத்து ஆயிரமாக இருக்காது, காலப் சொன்னது சரியா இருந்தா, எட்டு மில்லியன் அமெரிக்கர்களுக்கு இந்த மரண தருவாயின் அனுபவம் கிடைத்திருக்கிறது. தற்காலிகமாக இருக்கும் புதை குழி மற்றும் லைட்களில் என்னுடைய கவனம் கிடையாது. அது ஆக்சிஜன் இல்லாததினால் அப்படி இருக்கலாம்.

அதாவது, 1972 ல இருந்து இந்த அனுபவத்தை பெற்ற 100 கணக்கான பதிவுகளை

சேகரித்திருகிறேன் அதுல இரண்டு அடிகள் தள்ளி நடந்த விஷயங்களும் இருக்கு, சில அனுபவங்களில், இரண்டு மைல்கள் தள்ளி நடந்ததும் இருக்கும். ஒரு உதாரணத்தை உங்களுக்கு சொல்லுகிறேன், சமீபத்தில் நடந்த ஒன்று விஷயம். ஒரு மெடிகல் டாக்டர், இருதய நிபுணர், மைகள் சபோம், 1982ல் தனது புத்தகமான ரீகலேக்க்ஷன்ஸ் ஆப் டெத்: மருத்துவ கண்ணோட்டம் என்பதில், அவர், "இதை எழுதும்போது மரண தருவாயின் அனுபவங்கள் மட்டும்தான் இருந்தது. இப்போது மரணத்திற்கு பிறகுள்ள அனுபவமும் இருக்கிறது என்கிறார்." சமீபத்தில் வெளியான வெளிச்சமும் மரணமும் என்ற புத்தகத்தில்

தென் பகுதியில் உள்ள ஒரு சகோதரியை பற்றி சொல்லுகிறார் அவங்களுக்கு 30 வயது அவங்களுக்கு மூலையில் ரத்த நால வீக்கம் இருந்தது அதற்கான சிகிச்சைக்கு அறிசோனாவிற்கு போகணும். இந்த சிகிச்சைக்கு ஒரே ஒரு மருத்துவர் ஆன் இருக்காருன்னு கேட்டு ஆச்சரியப்பட்டேன், ஆனா அந்த அறையில் சுமார் முப்பது மருத்துவர்கள் இருந்தாங்க, என்ன நடந்துச்சுன்னா, அவன் மண்டை ஓட்டை திறப்பாங்க அந்த வீக்கமான நாளம் பக்கத்தில் இருந்தா , சரி செய்திடுவாங்க. ஆனா அது ரொம்ப ஆழமா இருந்தா, அவங்க இன்னும் ஒரு படி மேல போய் ஆப்ரேஷன் ஸ்டேன்ட் ஸ்டில் என்பதை செய்வார்கள். இது ரொம்ப வியப்பா இருந்துது அவங்க அந்த நோயாளியை கொலை செய்றாங்க.

இப்ப, இந்த பெண் அரிசோனாவுக்கு போனாங்க. அவங்க மண்டை ஓட்டை திறந்தார்கள். அங்க இந்த நாளம் ரொம்ப ஆழமாக இருப்பதை கண்டறிந்தார்கள், அதனால அவங்கள கொன்னுட்டாங்க. அதாவது அவங்களோட சரீரத்தை 59 டிகிரீ  பாடி டெம்பரேச்சர்ல பதப்படுத்தி , தலையில இருந்த ரத்தத்தை எல்லாம் வெளியில எடுத்துட்டாங்க. அவங்க இருதயத்தை நிருத்தீட்டாங்க. அவங்க மூளையை நிருத்டீட்டாங்க. இது பல மணிநேரங்களுக்கு நிறுத்தப்பட்டது. இப்ப அவர் தன்னோட வேலை செய்றாரு சுருக்கமாக சொல்கிறேன், அதனுடைய முடிவை தெரிஞ்சுக்க விரும்புறீங்களா, அந்த நாளத்தை கண்டுபிடித்தார், சரி படுத்தினார், இன்றைக்கு அவங்க நல்லா இருக்காங்க. சரியா? இதுல சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா அவங்க சாட்சியில, அந்த ரம்பத்தோட சத்தம் கேட்டிருக்காங்க, அதாவது அது அவங்களோட சரீரத்திலிருந்து வெளிய வந்து, அவரோட தோள்களுக்கு மேல இருந்து அவங்க தலையை பார்ப்பது போல இருந்ததாம். இப்ப, அவங்க தன்னை கொலை செய்ய போகிற அந்த தருவாயில் இருக்காங்க அதை உறுதி செயும்விதமாக ஆறு குறிப்புகளை சொல்றாங்க. அவங்க சொன்ன ஒரு விஷயம் என்னன்னா, அதாவது, “பிசாவை அறுக்கிற கத்தியை போன்ற ஒன்றினுடைய சத்தத்தை கேட்டேன் அது எப்படியிருக்குன்னு தெரியல, ஆனா, அதுவந்து, “ஒரு பேனாவோடு சின்னதா ஒன்னு சேர்ந்தமாதிரி இருந்தது... அதை எப்படி தெரிஞ்சுக்கிட்டாங்க? அதற்கு அவங்க, “உங்க பக்கத்துல சாகட் ரின்ச் இருப்பது போல இருந்ததுன்னு சொன்னாங்க.”

மெடிகல் டாக்டர் கேட்டாரு, “இந்த சாக்கட் ரின்ச் என்றால் என்ன? அதற்கு அவங்க ஆதாரம் தரும்படி கேட்டார். அவர் சொன்னார், “இங்க, ஒரு பாக்ஸ்ல எல்லா உபகரணங்களும் திறந்து வைக்கப்பட்டு இருக்கிறத என்றார்.” மேலும் அவர், “ஒரு டிரில்லோட படத்தை வரைங்கன்னு சொன்னார். அவங்க வரஞ்சாங்க. ஒரு சாக்கட் செட்டோட படம் வரைங்க என்றார். அவங்க வரைஞ்சாங்க. அதற்கு அப்பறம் அந்த அறையில் நடந்த காரியங்களை சொன்னாங்க. அவங்களோட ஆர்டரிய கண்டு பிடிக்க முடியலையாம். அதனால அடுத்த பக்கமா அதை பார்த்தாங்களாம். அதை தீர்மானித்த டாக்டரையும் அடையாளம் காட்டினாங்க. யாரால ஆர்டரிய கண்டுபிடிக்க முடியலன்னு சொன்னாங்க. அது அவங்க மெடிகல் ரிபோட் ளையும் இருக்குது. ஆனா அந்த அனுபவத்தில்... அவங்களை கொன்னுட்டாங்க. அதாவது, அவங்க மூணு மணிநேரம் ஜீவனில்லாம இருந்தாங்க அவங்களுக்கு இதெல்லாம் ஞாபகம் இருந்திருக்கு என்ன நடந்துதுன்னு மத்தவங்ககிட்ட சொல்றாங்க.

இதேமாதிரி இன்னொரு அனுபவம், சுருக்கமா சொல்றேன், ஒரு பொண்ணு தண்ணீல மூழ்கீட்டா. தண்ணிக்கு கீழ 19 நிமிடங்கள் இருந்தா. அன்றிரவு அவளோட பெற்றோர் என்ன செய்தாங்கன்னு சொன்னா, அம்மா டின்னருக்கு என்ன செய்தாங்க, அப்பா எங்க உட்கார்ந்திருந்தார், G.I. ஜோய் கூட தம்பி விளையாடிட்டு இருந்தான், தங்கை வைத்திருந்த பொம்மை எல்லாம் சொன்னா. அன்று வானொலியில் வந்த பிரபலமான பாடலை பற்றி பேசிக்கொண்டு இருந்தால்... அவளோட மூளை வேலை செய்யல, கோமாவில் இருந்தது. மூன்று நாளைக்கு பிறகு கண்விழித்து டாக்டர்கிட்ட கேட்டா, "நீங்கதான என்னை நினை வு திரும்பி வர வைத்தீங்க." அவரிடம் எல்லாத்தையும் சொல்லியிருக்கா அவர் மூன்று நாளைக்கு முன்னால நடந்தது உண்மையான்னு கேட்டு விசாரித்தார்.

இப்ப, இதெல்லாம் கொஞ்சம் கடினமானது தான்னு தெரியும் இதுமாதிரி இன்னும் நிறையா சொல்ல முடியும். சரி, இது உண்மையாக இருந்தால் அதாவது மரணத்திற்கு பிறகு இருக்கும் வாழ்க்கை,இது இயேசுவுக்கு சாத்தியமா, மரணத்திற்கு பிறகு ஜீவன் இருக்கும் என்றால், இது உயிர்த்தெழுதல் என்று நாம் சொல்லுகிற காரியத்தை விளங்கிக்கொள்ள உதவியாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டோனி?

**Dr. ஆண்டனி பிழூ** இது மரணத்திற்கு பிறகும் ஜீவன் இருக்கும் என்பதை சொல்லுகிறதா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, அதாவது, இது, நலிந்த வாழ்க்கை என்று சொல்வதற்கில்லை, பரலோகம் நரகம் பற்றியது இல்ல, நா என்ன சொல்றேன்னா மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்க்கை இருக்குது, மரணத்திற்கு பிறகு ஜீவன் இருக்குது, அது நிமிடங்களாக இருக்கலாம், சிலசமயத்தில் பல மணிநேரம், இருதயம் மூளையின் அலைகள் ஓய்ந்த பிறகு சில நிமிடங்கள் உயிரிருக்கும்.

சரி,உதாரணத்திற்கு, ஒருத்தர் எதையோ பதிவு செய்றாங்க, என்னோட மெடிகல் ரிப்போர்ட் 3:02க்கு என்னோட மூச்சு நின்னுடுச்சு அடுத்து 3:15 க்கு மூளை வேலை

செய்யலன்னு இருக்கு ஆனா சில நிமிடங்கள் அல்லது மணிநேரங்களுக்கு பிறகு ஏதோவொரு மாற்றம் நடந்ததாக பத்தி செய்யப்படுகிறது, அப்ப என்ன நடந்துதுன்னு என்னால சொல்ல முடியும். அது, காவல்துறை அறிக்கைக்கு முன்பு பின்பு என்பது போல இருக்கும். சரி, மரணத்திற்கு பிறகிருக்கும் ஜீவன் என்பது பரலோகம் நரகம் பற்றிய பாரம்பரிய கண்ணோட்டம் அல்ல ஆனா மரணத்திற்கு பிறகு சில நிமிடங்களில் நடக்கும் சம்பவத்தை அறிந்திருப்பதாகும், இந்த மரித்த பிறகு நடக்கும் இந்த காரியங்கள் இயற்கையின் விதிபடி ஏற்றுகொள்வது கடினமாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டோனி, இது இயற்கையின் நியதிக்கு அப்பாற்பட்ட ஒன்று இருக்கிறது என்பது சாத்தியப்பட இது போதுமானதா?

**Dr. ஆண்டனி பிழூ** ம்ம்? நிச்சயமா இல்ல, அதாவது, இது வேறொரு தலைப்புக்கு கீழானது. இது எனக்கு பிடித்த தலைப்புகளில் சொன்றாகும். எதிர்கால வாழ்வு குறித்து பல கட்டுரைகளை எழுதியிருக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அப்ப இந்த மாதிரியான காரியங்களுக்கு நீங்க சொல்ற விளக்கம் என்னவாக இருக்கிறது, இயற்கையின் ரீதியானவை?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அவங்க இருதயம் மற்றும் மூளை செயல்படாமல் இருந்த நேரத்தை பற்றி பதிவு செய்திருகிறார்கள் இல்லையா?

**Dr. ஆண்டனி பிழு** இதை பொதுவாக சரீரத்திற்கு புறம்பே நடக்கும் அனுபவங்கள் என்று சொல்வார்கள், அப்படிதானே?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** OBE தவிர அங்க ஒருவர் மரணத்திற்கு நிகரான நிலையை அடைவது கிடையாது. மேலும் NDE ல, மரணத்தை நெருங்கி இருப்பார்கள். அலபாமாவில் இருக்கும் இந்த பெண்ணின் கதையில், அவங்க ஜியார்ஜியான்னு நினைக்கிறேன், மரணத்திற்கு பிறகுள்ள அனுபம், கொண்டிருந்தாங்க இதை ஏற்றுகொள்ள முடியும். அதாவது, 59 டிகிரீயில் ரத்தம், தலையில ரத்தமே இல்லை, இருதயம் இல்லை, பலமணிநேரத்துக்கு மூளை இல்லை. எதையுமே சொல்ல முடியாது அப்படித்தானே இருந்திருக்கணும், அப்படி இல்லையே?

**Dr. ஆண்டனி பிழு** இல்ல, அவங் அமுலுசா செத்து போயிருந்தா, இந்த அளவிற்கு அவங்க குணமாகி இருக்க முடியாது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** மூளை வேலை செய்யாத ஒருவருடைய வாழ்வில் நடந்த ஆதாரங்களை பார்க்க தூண்டுகிறது. அவங்களுக்கு நுரையீரல் மெசின் வைக்கப்பட்டு இருந்தது. சொல்லப்போனா, அவங்க டாக்டர் அவங்களோட கூட இருந்தவங்கல்ல 10000 சதவிகிதத்துல பத்து சதவீதம்தான் இவங்க உயிரோட இருக்க முடியுன்னு

சொல்லியிருந்தார். மூணு நாளைக்கு பிறகு இவங்க இவங்க நார்மலாகி அவங்ககிட்ட கேட்டாங்களா, “நீங்க தான எனக்கு சுயநினைவு வரும்படி செய்தீங்க. தாடியில்லாம உயரமா இருந்தவர் எங்கே?” அவர் சொன்னாராம், அவரை நா வர சொல்றேன்.” இவர் ஒரு நாத்திகர் நானே அந்த டாக்டரிடம் பேசினேன். என்ன தெரியுமா. இப்ப அவர் நாத்திகராக இல்லை. இறை நம்பிக்கை இருக்கு. ஆனா கிறிஸ்தவர் இல்ல, ஆனா ஒரு நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

இது எதற்கு ஆதாரமாக இருக்குது.

ஆமா, அதாவது, இதை இன்றைக்கு மனோதத்துவ ஆராய்சிகளில் பயன்படுத்துவதை பார்க்க முடியும், இதை அவர்கள் பாரா சைகாலஜி என்கின்றனர், ஆராய்ச்சி, அதாவது இதை நான் சைகொநீசிஸ் நிலையில் இல்லாதை பற்றி சொல்வது என்பேன்... கூடுதலான கண்ணோட்டத்தை பற்றியது என்றிடலாம்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆனா நீங்க ESP ய நம்புவதில்லையே.

**Dr. ஆண்டனி பிழு** இல்ல.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப இருதயமும் மூளையும் வேலை செய்யாத ஒரு நிலையில் சொல்லப்படும் பதிவுகளுக்கு இயற்கையின் நியதிக்கும் என்ன சம்பந்தம்?

**Dr. ஆண்டனி பிழூ** எனக்கு அதை பற்றி தெரியாது. ஆனா பெரும்பாலான ESP ரிபோர்ட்ட வைத்து என்ன செய்வதென்று தெரியும் ஏன்னா ஜனங்கள் மறுபடியும் மறுபடியும் இதற்கான ஆதாரங்களை வெளிபடுத்த விரும்பறாங்க இதை மறுபடியும் மறுபடியும் காட்டுவதுதான் அதற்கு சிறந்த வழியாக இருக்கும்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆனா, இவங்களுக்கெல்லாம், வேலை செய்யும் மூளையும் இருதயமும் இருக்கிறதே.

**Dr. ஆண்டனி பிழூ** ஆமா, ஆமா. இது புதிய விதம்...

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆனா மூளையும் இருதயமும் இல்லாமன்னு, சொன்னா அசாதாரனமானதா இருக்கும்.

**Dr. ஆண்டனி பிழூ** எனக்கு இது புதுசுதான், ஆமா. இது எனக்கு ரொம்ப புதுசா இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். இதை எல்லாத்தையும் சுருக்கமாக பார்க்கலாம். கேரி, நாம பேசின எல்லா காரியங்களையும், பார்க்கும்போது, மரணத்திற்கு நிகரான அனுபவம். இது எங்க பொருந்தும்? இந்த ஆதாரங்கள் எல்லாம் உங்களுக்கு என்ன சொல்கிறது என்று சொல்லுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** நா, என்ன சொல்றேன்னு கேட்டா, அதை பத்தி நாம இன்னும் பேசவே இல்லை, ஆனா கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தின் கண்ணோட்டத்தை பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். டோனி சொன்னது போல, தேவன் இருக்கிறார் எனபது மட்டுமெல்ல, அவர் பழைய ஏற்பாட்டின் தேவனாக இருக்கிறார். இங்க ஒரு பாரம்பரியம் நுழைகிறது. தேவன் இருக்கிறார் என்று சொல்ல வழி இருக்கிறது தேவனுடைய எழுத்துக்கள் தான் வசனங்கள் என்று சொல்ல ஆதாரங்கள் இருக்கிறது. அந்த வாழ்ந்தார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது, இயேசு அற்புதங்கள் செய்தார் என்றால், அவர் மரித்தோரிளிருந்திருந்தும் எழுந்திருப்பார். இன்றைக்கு நாம மருத்துவ துறை ஜெபத்திற்கு பதிகள் கிடைத்தது என்று சொன்ன டபிள் பிளைன்ட் ஆய்வுகளை பற்றி பார்த்தோம், 26 நிலைகளில் 21 நிலைகள் பாதிபேர் முன்னேற்றத்தை பெற்றுகொண்டனே, நமக்கு நேரமிருந்திருந்தால் சில சுகம் பெற்றுகொண்டவர்களின் சாட்சிகளை கேட்டிருக்கலாம். மரண தருவாயின் அனுபவங்கள்; மேலும் உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்களை பற்றி நாம் பார்த்தோம். அதாவது கிரிஷ்ட்வர்களின் கூற்று என்னன்னு கேட்டா, உயிர்த்தெழுதல் என்பது ஒதுக்கப்பட்ட ஒன்றல்ல, இதுதான் ரொம்ப முக்கியமானது, என்கிறார்கள் அதைதான் உலக கண்ணோட்டத்தின் நம்பிக்கையாக இருக்கனுமாம். இதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானது மேலும் அதில், தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பினார் என்பது அசாதாரணமான ஒன்று. இதெல்லாம் இயேசு தமை யார் என்று சொன்னாரோ அதை விளக்கிடும் விதங்கலாகும், அவர் ஜீவனோடு இருக்கிறார் இந்த உலகத்தில் தேவன் இன்னும் பல விதங்களில் கிரியை செய்துகொண்டு, இருக்கிறார்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.